**மார்ச் – 26**

# TNPSC துளிகள்

- நமீபியாவின் முதல் பெண் அதிபராக நெடும்போ நந்தி-நதைத்வா பதவியேற்றுள்ளார்.
    - லைபீரியாவின் எலன் ஜான்சன் சர்லீஃப் என்பவருக்குப் பிறகு நேரடியாக ஒரு அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இரண்டாவது ஆப்பிரிக்கப் பெண்மணி இவரே ஆவார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II






- 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II' திட்டத்தினை அமல்படுத்தச் செய்வதற்காக 1,087 கோடி ரூபாய் நிதி ஒதுக்க தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கி உள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் கிராமப் புறங்களில் அடிப்படை உள்கட்டமைப்பை மிக நன்கு மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் திட்டம் ஆனது ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் அமல் படுத்தப் படுகிறது.
- 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் ஆனது, அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் உள்ள ஒட்டு மொத்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைப் படிப்படியாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், குளங்களைப் புனரமைத்தல், தெருக்கள் மற்றும் சாலைகளை நன்கு மேம்படுத்துதல், புதிய தெரு விளக்குக் கம்பங்களை நிறுவுதல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்தல் உள்ளிட்டவை மேற்கொள்ளப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் 12,482 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன.
- 2025-26 ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் ஆனது 2,329 கிராமப் பஞ்சாயத்துகளில் செயல் படுத்தப்பட உள்ளது.
- ஒரு கிராமப் பஞ்சாயத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய பல பணிகளைத் தொகுதி அளவிலான குழுக்கள் முடிவு செய்யும்.
- அந்தத் தேர்வுக் குழுவால் பட்டியலிடப்பட்ட அனைத்துப் பணிகளும் சிறப்புக் கிராம

சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

- பட்டியலிடப்பட்ட சாதியினர்/பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளுக்கு குறைந்தபட்சம் 30% நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

## இந்தியாவில் உள்ள குறுகிய கால மின்சார சந்தை குறித்த அறிக்கை 2023-24




- தமிழ்நாடு மின் விநியோகக் கழக லிமிடெட் (TNPDCL) நிறுவனம் ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் மின்னாற்றல் பரிமாற்றங்களிலிருந்து சுமார் 8,606 மில்லியன் அலகுகள் மின்சாரத்தினை வாங்கியது.
- முன்னர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் (TANGEDCO) என்று அழைக்கப்பட்ட TNPDCL ஆனது 7,953 கோடி ரூபாய் செலவில் மின்சாரத்தை வாங்கியது.
- இந்த மின்னாற்றல் பரிமாற்றங்களில், அதிக விலையிலான பிந்தைய நாள் மதிப்பு அடிப்படையிலான சந்தையிலிருந்து (HP-DAM) மின்சாரத்தினை வாங்கும் ஒரு முக்கிய நிறுவனமாக TNPDCL உள்ளது.
- இந்தக் கோடை காலத்தில் தமிழ்நாட்டின் மின் தேவையானது, 2024 ஆம் ஆண்டு மே 02, ஆம் தேதியன்று பதிவான அதன் முந்தைய ஆண்டின் அனைத்து நேரத்திலும் இல்லாத மிக உச்சபட்சத் தேவையான 20,830 மெகாவாட்டை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்று மாநிலத்தின் அதிகபட்சத் தினசரி நுகர்வு 454.32 மில்லியன் அலகுகள் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## வணிகத்திற்கான பாராளுமன்ற நிலைக் குழு


- வர்த்தகத்திற்கான பாராளுமன்ற நிலைக் குழுவானது, இந்திய அரசாங்கத்திற்கு தனது பரிந்துரையை வழங்கியுள்ளது.
- தற்போதைய உற்பத்தி ஊக்குவிப்புத் (PLI) திட்டத்தின் கால வரம்பினையும் அதன் மிக முக்கிய நோக்கத்தையும் மேலும் பல துறைகளுக்கு நீட்டிக்கவும், "நிர்வாக ரீதியான தாமதங்கள்" மற்றும் "விதிகளின் இணக்க நெருக்கடிகளைக்" குறைப்பதன் மூலம் அதன் செயல்திறனை மேம்படுத்தவும் கோரியுள்ளது.
- மேலும், இந்தத் திட்டத்தின் பரவல் எல்லையினை இரசாயனங்கள், தோல் பொருட்கள், ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் போன்ற தொழிலாளர் வளம் அதிகம் தேவைப்படும் துறைகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தவும் பரிந்துரைத்துள்ளது.

- தற்போது, PLI திட்டம் ஆனது சுமார் 1.97 டிரில்லியன் டாலர் ஒதுக்கீட்டுடன் கைபேசிகள், ஆளில்லா விமானங்கள், மிகப் பெரிய மின் துறைப் பொருட்கள், தொலைத்தொடர்பு, ஜவுளி, வாகனங்கள், சிறப்பு எஃகு மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட சுமார் 14 துறைகளை உள்ளடக்கியது.
- உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்துவதற்காக என பாதுகாப்பு உற்பத்தி, விண்வெளி மற்றும் கப்பல் கொள்கலன்கள் போன்ற கூடுதல் துறைகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவும் குழு பரிந்துரைத்துள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்தோரின் உயிரிழப்புகள்




- ஆபத்தானப் புலம் பெயர்வு பாதைகளில் சுமார் 9,000 பேர் மற்றும் 2024 ஆம் ஆண்டில் வன்முறையால் கொல்லப்பட்டவர்களில் 10 பேரில் ஒருவர் இப்புலம் பெயர்வின் போது உயிரிழந்தனர்.
- மத்தியத் தரைக் கடல் பகுதியினைக் கடக்கும் ஆசிய வழித்தடங்கள் என்பவை மிகவும் ஆபத்தான பாதையாகும் என்ற ஒரு நிலைமையில் அதைத் தொடர்ந்து சஹாரா

பாலைவனத்தினை உள்ளடக்கிய ஆப்பிரிக்கா உள்ளது.

- ஆசியாவில் 2,788 பேரும், மத்தியதரைக் கடலில் 2,452 பேரும் மற்றும் ஆப்பிரிக்காவில் 2,242 பேரும் உயிரிழந்துள்ளனர்.
- ஈரான், மியான்மர், வங்காளதேசம் மற்றும் மெக்சிகோவில் வன்முறையால் மிக அதிக மரணங்கள் பதிவாகின.

# பொருளாதாரச் செய்திகள்

## 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி

- இந்தியாவானது 1 பில்லியன் டன் (bt) என்ற அளவிலான வருடாந்திர நிலக்கரி உற்பத்தி அளவினைக் கடந்து 1.03 பில்லியன் உற்பத்தியினை எட்டியுள்ளது.
- இது 2023-24 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 953.3 மில்லியன் டன்கள் என்ற மொத்த உற்பத்தியினை விட 5.24 சதவீதம் அதிகமாகும்.
- சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவானது இரண்டாவது மிகப்பெரிய ஒரு நிலக்கரி உற்பத்தியாளராக உள்ளது என்பதோடு மேலும் அதன் மின்சாரத் தேவையில் சுமார் 75 சதவீதத்தினைப் பூர்த்தி செய்ய நிலக்கரி உற்பத்தியினைச் சார்ந்துள்ளது.
- இந்திய நாடானது, இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து உயர் தர நிலக்கரியை இறக்குமதி செய்கிறது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## அலை இயக்கத்தின் மூலம் இயங்கும் தானியங்கு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கருவி

- இந்தியா மற்றும் அமெரிக்காவில் உள்ள தனியார் நிறுவனங்கள் ஆனது, அலை இயக்கத்தின் மூலம் இயங்கும் தானியங்குக் கருவி (வேவ் கிளைடர்) எனப்படும் நீர் மூழ்கி எதிர்ப்புப் போர்க் கருவிகளுக்கான (ASW) தானியங்கு மேற்பரப்புக் கப்பல்களை (ASVs) ஒருங்கிணைந்து உருவாக்குவதற்கும் இணைந்து தயாரிப்பதற்குமான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- அலை மற்றும் சூரிய சக்தியால் இயக்கப்படும் வேவ் கிளைடர் ஆனது ஒரு தானியங்கு கட்டுப்பாட்டாளர்கள் இல்லாத மேற்பரப்பு/மிதப்பு வாகனம் (USV) ஆகும்.

- அவை தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகவோ இணைந்து, ஓராண்டு வரையில் நிகழ்நேரத் தரவை வழங்குகின்றன.
- இது தற்போது கடல் சார் கட்டமைப்புகளைக் கண்காணிக்கவும், கடலுக்கு அடியில் உள்ள எண்ணெய்க் கிணறு கட்டமைப்புகளுடன் தொடர்பு கொள்ளவும் எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையில் முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.




## காந்தத்தின் மூன்றாவது வடிவம்




- மாற்று காந்தவியல் எனப்படும் மிக அரிதான மூன்றாவது வகை காந்தத்தின் முதல் உறுதியான ஆதாரத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஒரு காந்தத்தின் மற்ற இரண்டு வடிவங்கள் ஃபெரோ/அயக்காந்தவியல் மற்றும் எதிர் அயக்காந்தவியல் ஆகியனவாகும்.
- மாற்று காந்தப் பொருட்கள் ஆனது, மற்ற இரண்டு வகைகளுக்கும் இடையில் உள்ள ஓர் அமைப்பைக் கொண்டுள்ளன.
- மாற்று காந்தங்களில், ஒவ்வொரு அலகும் அருகிலுள்ள காந்த அணுவுடன் ஒப்பிடும் போது சற்று முறுக்கப்பட்ட நிலையில் காணப்படும் என்பதோடு இதன் விளைவாக இது அயக்காந்தத்தன்மைக்கு ஒத்த பண்புகளைக் கொண்டிருக்கும்.

- மாற்றுக் காந்தங்கள் அயக்காந்த மற்றும் எதிர் அயக்காந்தப் பொருட்களின் சிறப்புப் பண்புகளை ஒருங்கே இணைந்தவாறு கொண்டுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## Transforming Forest Finance அறிக்கை




- UNDP அமைப்பினால் மிக ஆதரிக்கப்படும் வனப் பிரகடன மதிப்பீட்டு அமைப்பானது, "Transforming Forest Finance" என்ற புதிய அறிக்கையினை வெளியிடப்பட்டுள்ளது.
- காடழிப்பை நிறுத்த ஆண்டிற்கு சுமார் 460 பில்லியன் டாலர் நிதித் தேவைப்பட்டாலும், ஆனால் வழங்கப்படும் உண்மையான நிதி உதவி மிகவும் குறைவாகவே உள்ளது.
- வனப் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு ஒரு டாலர் செலவிடப்படும் போதும், காடழிப்பைத் தூண்டும் நடவடிக்கைகளுக்காக 6 டாலர் செலவிடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில், தனியார் நிதி நிறுவனங்கள் ஆனது காடழிப்புடன் தொடர்புடைய துறைகளில் 6.1 டிரில்லியன் டாலர் முதலீடு செய்துள்ளன.
- REDD+ முன்னெடுப்பின் கீழ், ஒரு டன் கார்பன் டை ஆக்சைடுக்கு 5–10 டாலர் வரை வழங்கப் படும் நிதிகள் போதுமானதாக இல்லை.
- ஆனால், உமிழ்வைக் குறைப்பதற்கான உண்மையானச் செலவினம் டன்னுக்கு 30–50 டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## உலகப் பொருளாதார மன்றத்தின் Uplink முன்னெடுப்பு


- உலகப் பொருளாதார மன்றத்தின் Uplink அமைப்பு ஆதரவு பெற்ற துணிகர முதலீட்டு முன்னெடுப்புகள் ஆனது கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 142,400 டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைத் தடுத்துள்ளன.
- இது சுமார் 30,000க்கும் மேற்பட்ட கார்களின்/மகிழுந்துகளின் வருடாந்திர உமிழ்விற்கு இணையான அளவாகும்.
- இந்தப் புத்தொழில் நிறுவனங்கள், அமேசான் மழைக்காடுகளின் ஐந்தில் ஒரு பங்கு பரப்பளவான 140 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு மற்றும் நீர்வாழ் பகுதிகளைப் பாதுகாத்துள்ளன.

- 2.5 பில்லியன் லிட்டர் அபாயகரமான கழிவுநீரைச் சுத்திகரித்தல் மற்றும் 28 மில்லியன் டன் கழிவுகளைக் கண்காணித்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டன.
- இந்தியாவில், இந்திரா வாட்டர் நிறுவனமானது, கழிவுநீர்ச் சுத்திகரிப்புத் திறனை மிக நன்கு அதிகரித்து, 2024 ஆம் ஆண்டில் 1.2 பில்லியன் லிட்டர் கழிவு நீரைச் சுத்திகரித்து உள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 243 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.




# மாநிலச் செய்திகள்

## மேற்கு வங்காள அரசின் OBC பட்டியல் விவகாரம்




- மேற்கு வங்காள மாநில அரசு ஆனது, அம்மாநிலத்தில் உள்ள இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை (OBC) அடையாளம் காண்பதற்காக ஒரு புதியக் கணக்கெடுப்பை நடத்த உள்ளது.
- 2010 மற்றும் 2012 ஆகிய இரு ஆண்டுகளுக்கு இடையில், 75 முஸ்லிம் சமூகத்தினை உள்ளடக்கிய 77 சமூகங்களை அம்மாநில அரசு இப்பட்டியலில் சேர்த்துள்ளது.
- இந்தச் சேர்க்கை தொடர்பான சில பிரச்சினைகள் கல்கத்தா உயர் நீதிமன்றம் முன் வைக்கப் பட்டதோடு 2024 ஆம் ஆண்டில் அங்கு உயர் நீதிமன்றமானது இந்தச் சேர்க்கையினை ரத்து செய்தது.

- 2012 ஆம் ஆண்டு மேற்கு வங்காளப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பட்டியலிடப்பட்டச் சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (அரசுப் பணிகள் மற்றும் பதவிகளில் காலியிடங்களை ஒதுக்குதல்) சட்டத்தின் சில பகுதிகளையும் நீதிமன்றம் ரத்து செய்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இசை அகாடமி விருதுகள்

- வயலின் இசைக் கலைஞரான R.K. ஸ்ரீராம்குமார் இந்த ஆண்டிற்கான சென்னை இசை அகாடமியின் சங்கீத கலாநிதி விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இதில் நடனக் கலைஞர் ஊர்மிளா சத்தியநாராயணா நிருத்ய கலாநிதி விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இதில் சங்கீத கலா ஆச்சார்யா விருதுகள் ஆனது பாடகி சியாமளா வெங்கடேஸ்வரன் மற்றும் தவில் வித்துவான் T.R. கோவிந்தராஜனுக்கு வழங்கப்பட உள்ளன.
- இதில் TTK விருதுகள் ஆனது கதகளி நடனக் கலைஞர் மாடம்பி சுப்பிரமணிய நம்பூதிரி மற்றும் வீணை கலைஞர்கள் J.T.ஜெயராஜ் கிருஷ்ணன் மற்றும் ஜெயஸ்ரீ ஜெயராஜ் கிருஷ்ணன் ஆகியோருக்கு வழங்கப்பட உள்ளது.



# முக்கிய தினங்கள்

## வசந்தகால சம இரவு பகல் நாள் - மார்ச் 20




- இந்த நாள் ஆனது வடக்கு அரைக்கோளத்தில் வசந்த காலத்தின் தொடக்கத்தையும்

வசந்த கால சம இரவு பகல் நாளின் தொடக்கத்துடன் தெற்கு அரைக்கோளத்தில் இள வேனிற் காலத்தின் தொடக்கத்தினையும் குறிக்கிறது.

- இந்த நாளில், சூரியன் ஆனது நண்பகலில் நிலநடுக்கோட்டுக்கு மிகவும் நேர் எதிராக உச்சியில் தோன்றும்.
- சம இரவு பகல் நாளானது, ஒரு ஆண்டிற்கு இரண்டு முறை என அதாவது மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நிகழ்கின்றன என்பதோடு மேலும் இரு துருவங்களும் ஒரே நேரத்தில் சூரிய ஒளி பெறும் கால கட்டம் இதுவாகும்.
- வடக்கு அரைக்கோளத்தில், வசந்த கால அல்லது இளவேனிற் கால சம இரவு நாள் ஆனது பொதுவாக மார்ச் 19 மற்றும் 21 ஆகிய தேதிகளுக்கு இடையில் நிகழ்கிறது.
- இலையுதிர் கால சம இரவு நாளானது செப்டம்பர் 21 மற்றும் 24 ஆகிய தேதிகளுக்கு இடையில் நிகழ்கிறது.
- சம இரவு பகல் நாள் என்பது, ஒரு ஆண்டில் பகல் மற்றும் இரவு ஆகிய இரண்டும் சம கால நீளத்தில் இருக்கும் நேரத்தைப் பிரதிபலிக்கிறது.
- சம இரவு பகல் நேரத்தில், பூமியின் அச்சு மற்றும் சுற்றுப்பாதை ஆகியவை இரண்டு அரைக் கோளங்களும் சம அளவு சூரிய ஒளியைப் பெறும் வகையில் அமைகின்றன.

### சர்வதேச நௌரஸ் தினம் 2025 - மார்ச் 20




- பாரசீக மொழியில் "புதிய நாள்" என்று பொருள்படும் நௌரஸ் தினம் ஆனது, வசந்த காலத்தின் முதல் நாளையும் பாரசீக சூரிய நாட்காட்டியில் அதன் புத்தாண்டின் ஒரு தொடக்கத்தையும் குறிக்கிறது.
- சூரியன் வானியல் சார்ந்த நில நடுக்கோட்டினைக் கடக்கும் வசந்த கால சம இரவு பகல் நாளுடன் இது ஒன்றி வருகிறது.
- 2009 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது நௌரஸ் நாளினை மனிதகுலத்தின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியமாக சேர்த்துள்ளது.
- இந்தியாவில் புகழ்பெற்ற பாரசீக நௌரஸ் பண்டிகையை அறிமுகப்படுத்திய முதல் அரசர் சுல்தான் பால்பன் ஆவார்.

## இதரச் செய்திகள்

### பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்களுக்கான உலகளாவிய நிதி - 2024

- உலகளாவியத் தொழில்நுட்பத் துறையில் பெண்கள் நிறுவிய 69,000க்கும் மேற்பட்ட

தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளன என்பதொடு அவை கூட்டாக இன்றுவரையில் 309 பில்லியன் டாலர் நிதி திரட்டியுள்ளன.

- 2024 ஆம் ஆண்டில், பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்கள் மொத்த நிதியில் 11.7% பங்கினை மட்டுமே கொண்டிருந்தன.
- உலக அளவில் பெண்கள் தலைமையிலான தொழில்நுட்ப நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டில் 29.6 பில்லியன் டாலர் பங்கினைப் பெற்றன.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 33.1 பில்லியன் டாலரில் இருந்து 11% சரிவையும், 2022 ஆம் ஆண்டில் பதிவான 37.5 பில்லியன் டாலரில் இருந்து 21% சரிவையும் குறிக்கிறது.
- இந்தியாவில் பெண்கள் தலைமையிலான செயலில் உள்ள சுமார் 7,000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன என்ற ஒரு நிலையில் இது நாட்டிலுள்ள அனைத்து செயலில் உள்ள புத்தொழில் நிறுவனங்களில் 7.5% ஆகும்.
- பெண் நிறுவனர்களைக் கொண்ட நிறுவனங்களால் திரட்டப்பட்ட அனைத்து நேர நிதி உதவியின் அடிப்படையில், அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக சுமார் 26 பில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த மூலதனத் திரட்டலுடன் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★